**செய்தி வெளியீடு எண்: 935** **நாள்:07.12.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (7.12.2020) தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் திருப்பத்தூர் மாவட்டம் – நாட்டறம்பள்ளியில் 21 கோடியே 86 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/33 கி.வோ. துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 278 கோடியே 9 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 17 துணை மின் நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளியில் 5 கோடியே 22 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தலைமை பொறியாளர் (மின் தொடரமைப்பு திட்டங்கள்) அலுவலகக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில், சரியான மின் அழுத்தத்துடன் சீரான மின்சாரம் மக்களுக்கு வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், திருப்பத்தூர் மாவட்டம் – நாட்டறம்பள்ளியில் 21 கோடியே 86 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 110/33 கி.வோ. துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், மதுரை மாவட்டம் – சமயநல்லூரில் 94 கோடியே 44 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையம்;

கடலூர் மாவட்டம் – மேலப்பாலையூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டம்– தேனூர் (தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையம்) ஆகிய இடங்களில் 24 கோடியே 2 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டு 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – சின்னதடாகம் மற்றும் க.க.சாவடி மற்றும் விழுப்புரம் மாவட்டம் – கெடார் ஆகிய இடங்களில் 38 கோடியே 38 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான மூன்று 110/22 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

சென்னை மாவட்டம் –பள்ளிக்கரணை, செங்கல்பட்டு மாவட்டம்– திருமணி, தருமபுரி மாவட்டம் – இலக்கியம்பட்டி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் – E.T.A ஸ்டார் சிட்டி மாம்பாக்கம் ஆகிய இடங்களில் 73 கோடியே 7 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நான்கு 110/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

நீலகிரி மாவட்டம் –ஜெகதளா மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் –கீரமங்கலம் ஆகிய இடங்களில் 16 கோடியே 22 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டு 110/33 கி.வோ. துணை மின் நிலையங்கள் (விகிதாசார அறிமுகம்);

செங்கல்பட்டு மாவட்டம் – காயரம்பேடு மற்றும் கோவிந்தாபுரம், திருவள்ளூர் மாவட்டம் – வைகை காலனி, திருவண்ணாமலை மாவட்டம் –பனைஓலைப்பாடி மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – விஜயாபதி ஆகிய இடங்களில் 31 கோடியே 94 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான ஐந்து 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 299 கோடியே 96 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 18 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் சார்பில் திருச்சிராப்பள்ளியில் 5 கோடியே 22 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தலைமை பொறியாளர் (மின் தொடரமைப்பு திட்டங்கள்) அலுவலகக் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. கே.சி.வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல், தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச்

செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு. எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**